**மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் வெகுமதிகள் மற்றும் ஊக்குவிப்பு நிதியம் - 2014**

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் வெகுமதிகள் மற்றும் ஊக்குவிப்பு நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 2009 இன் 08 ஆம் இலக்க மோட்டார் வாகன (திருத்திய) அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட மோட்டார் வாகன அதிகாரச்சட்டத்தின் (203 அதிகாரம்) 213 ஈ (5) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மேற்கூறப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, வெகுமதிகள் மற்றும் ஊக்குவிப்பு நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டிற்குரிய திறைசேரி உண்டியல்களின் வட்டி ரூபா 3,116 தொகையினால் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2001 யூலை 10 ஆந் திகதிய 17/2001 ஆம் இலக்க பொதுநிருவாகச் சுற்றுநிருபம் | சுற்றுநிருப ஏற்பாடுகளுக்கு முரணாக 60 வயதின் பின்னர் ஓய்வு பெற்ற பெண் உத்தியோகத்தரொருவர் 2012 திசெம்பர் மாதம் தொடக்கம் நிதியத்தின் நிதிக்கட்டுப்பாட்டாளராக ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டு அப்பெண் உத்தியோகத்தருக்கு மீளாய்வாண்டில் சேவையாற்றிய முதல் 3 மாதங்களுக்காக ரூபா 105,000 கூட்டுத்தொகை படியாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபம் | |
| (i) 3.2(அ) பந்தி | செலுத்தவேண்டிய பணம் மற்றும் ஏனைய பொறுப்புக்களைத் தீர்த்ததன் பின்னர் எஞ்சுகின்ற மேலதிக பணம் தாமதமின்றி ஒன்றிணைந்த நிதியத்திற்கு மாற்றுதல் மற்றும் அப்பணம் முதலீடு செய்யப்பட்டிருக்குமிடத்து அவை முதிர்ச்சியடைந்தவுடன் |

| | |
|---|---|
| | உடனடியாக ஒன்றிணைந்த நிதியத்திற்கு மாற்றவேண்டியிருந்த போதிலும் நிதியத்தின் ரூபா 42,722,005 தொகையான மீதி தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 4.1(அ) பந்தி | நிதியத்தின் நோக்கங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்ட வருடாந்த பாதீட்டில் அதன் கட்டுப்பாட்டு உத்தியோகத்தர் மற்றும் அமைச்சின் செயலாளரால் அமைச்சரின் முன்அங்கீகாரம் பெறப்பட்டு முன்னைய ஆண்டின் செப்தெம்பர் 30 ஆந் திகதியில் உள்ளவாறு தேசிய பாதீட்டுப் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.4 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 ஏப்ரல் 25 ஆந் திகதிய 06/2006 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் 06(ஈ) உப பந்தியின் பிரகாரம் சகல படிகள் மற்றும் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் தொடர்பாக பொது நிருவாக அமைச்சின் மூலம் தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவினால் விசாரித்து ஆலோசனை வழங்க வேண்டியிருந்த போதிலும், அதற்கு முரணாக முன்னைய ஆண்டுகளைப் போன்றே மீளாய்வாண்டின் போதும் பதவியணியினருக்காக ஊக்குவிப்புப் படி செலுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் செலவினம் ரூபா 76,995,932 ஆக இருந்தது.

(ஆ) போக்குவரத்து அமைச்சில் சேவையாற்றுகின்ற திணைக்களத்தின் 04 உத்தியோகத்தர்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 343,051 கூட்டுத்தொகையான ஊக்குவிப்புப் படி செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 7,225,948 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 4,799,765 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 2,426,183 தொகையான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது மோட்டார் வாகன அதிகாரச்சட்டத்தின் கீழ் அறவிடப்படுகின்ற கட்டணம், வரி மற்றும் மிகைக் கட்டணமாக சேர்ந்த வருமானங்கள் என்பன ரூபா 18,223,888 இனால் அதிகரித்தமை இந்த முன்னேற்றத்திற்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மோட்டார் வாகனங்களைத் தயாரித்தல், உற்பத்தி செய்தல், பொருத்தி இணைத்தல், புதிதாக வடிவமைத்தல், மெருகூட்டுதல், தோற்றங்களை மாற்றுதல் மற்றும் வடிவமைப்புக்களை மாற்றுதல் போன்ற செயற்பாடுகளுக்காக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் முன்அங்கீகாரமின்றி மேற்கொள்ளப்படுகின்ற சட்டவிரோதமான நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களை வழங்குபவர்களுக்கு பரிசுப் பணம் வழங்குதல் நிதியம் தோற்றுவிக்கப்பட்ட அடிப்படை நோக்கமாக இருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் அவ்வாறான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும் தகவல்களை வழங்குபவர்களுக்கும் பரிசுப் பணம் செலுத்துவதற்குரிய முறைமையொன்றினை தயாரிப்பதற்கு நிதியமானது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மோட்டார் வாகனங்கள் தொடர்பாக பிழையான செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கின்ற நபர்கள் தொடர்பாக தகவல்களை வழங்கும் நபர்களை உருவாக்கலும், அவ்வாறான தகவல்களை வழங்குவதற்கு அவர்களை தைரியமூட்டுதலும் இவ்வாறான பிழையான செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கின்றவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்காக உத்தியோகத்தர்களுக்கு தைரியமூட்டுதலும் வெகுமதி நிதியம் உருவாக்கப்பட்டதன் எதிர்பார்க்கப்பட்ட பணியாக இருந்த போதிலும், அவ்வாறான தகவல்களை வழங்குபவர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும்

தைரியமூட்டும் வகையில் எவ்வித செயற்பாடும் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்தமைக்கான தகவல்கள் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

வெகுமதி மற்றும் ஊக்குவிப்புக் கொடுப்பனவு நிதியத்திற்குரிய செயல் நடவடிக்கைத்திட்டம் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

நிதியத்தின் 6 வருமானம் மற்றும் செலவின முரண்கள் தொடர்பாக பாதிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம், உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களுடன் ஒப்பீடு செய்த போது 26 சதவீதம் முதல் 34 சதவீதம் வரை முரண்கள் ஏற்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளிலான நலிவுகள் தொடர்பில் அவ்வப்போது மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாதீடு

(ஆ) கணக்கீடு